ஓம்

தத்ஸத் பிரஹ்மணேநம:

கைவல்யோபநிடதம்
அமிருதபிந்தூபநிடதம்
சுகாகசியோபநிடதம்
ஸ்கந்தோபநிடதம்.

104

108 104

CCNo 14554

இவை

தஞ்சைமாநகரம்

ஸ்ரீ பிரஹ்மநிஷ்ட பண்டித வி. குப்புஸ்வாமிகளால்

மொழிபெயர்க்கப்பட்டு

தஞ்சை ஸ்ரீ சங்கரவிலாச சாரதாமந்திரம்

மானேஜிங் டிரஸ்டி

ஸ்ரீமத் S. பாக்கியம்பிள்ளை அவர்களால்

தஞ்சை

ஸ்ரீ வித்யா விநோதினி முத்ராசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

1919.

இதன் விலை] *Copy-Right Registered.* [அணா 5.

104

ஓம்தத்ஸத் பிரஹ்மணேநம:

முகவுரை

சர்வஜீவ தயாபரராகிய ஸ்ரீபரமேசுவரன் ஆத்மாக்களுய்யுமாறு சரீரத்துள்ள வாதம் பித்தம் கபமென்னும் மூன்று தோஷங்களையும் நீக்குதற்பொருட்டு ஆயுள்வேதத்தினை வெளிப்படுத்தியதுபோலவே சித்தத்துள்ள மலமுதலிய மூன்றுதோஷங்களையும் கெடுப்பதற்காக முக்காண்ட வடிவவேதத்தினை வெளிப்படுத்தியருளினார். அதில் முந்திய விரண்டு காண்டங்களிற் சொல்லப்பட்ட கர்மோபாசனைகளை நிஷ்காமமாகச்செய்து, அதனால் மலமாகிய பாவமும் விக்ஷேபமாகிய சஞ்சலமும் நீங்கப்பெற்றுச் சாதனசம்பந்நரான அதிகாரிகட்கு ஆவரணமாகிய மறைப்பு நீங்குதற்பொருட்டு வேதத்தின் அந்தபாகமான உபநிடதங்களை வெளியிட்டருளினார். அவை சாகாபேதத்தால் நூற்றெட்டாம். அவற்றுள், சாரபூதமாயுள்ள கைவல்யம், அமிருதபிந்து, சுகரகசியம், ஸ்கந்தம் என்னும் நான்கு உபநிடதங்களை எவரும் பாராயணஞ்செய்து அப்புண்ணியவாயிலாகச் சித்தியினையெய்தி அவற்றினுட் பொருளினைச் சிந்தித்து தத்துவஞானத்தினைப் பெற்றுய்யுமாறு தஞ்சைமாநகரம் ஸ்ரீ பிரஹ்மநிஷ்டபண்டித வீ. குப்புஸ்வாமிகளவர்கள் தமிழில் செய்யுள் வடிவமாக இயற்றியருளினர். அவை முன்னரே வசனரூபமாக வெளிப்பட்டுள்ளனவாயினும், செய்யுள்வடிவமாக வந்தில. அது பற்றியே அவை எல்லோருக்கும் உபயோகமாகுமாறு தஞ்சை ஸ்ரீ சங்கரவிலாச சாரதாமந்திரம் மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீமத் S. பாக்கியம்பிள்ளை அவர்களால் அச்சிடப்பட்டு வெளிப்படுத்தப்பட்டன. இவ்வுபகாரம் மறக்கத்தக்கதன்று.

வெ. வீ.

பிழைதிருத்தம்.

பக்கம் நெ.	வரி நெ.	பிழை.	திருத்தம்.
உ	உச	சலியாதவர் பின் சேர்க்கவும்	அல்லது பிறவியைச்சாடும் அப்பதஞ்சலி முனிவர்
உ௩	க௩	கள் செண்ம	கள் சென்
உச	கக	தாதலாது	தாதலானு
உரு	உச, உஉ	* அடையாமிட்ட புட்நோட்	† அடையாளமுள்ள உசு-வது பக்கம்
உசு	உக, உஉ	† அடையாமிட்ட புட்நோட்	* அடையாளமுள்ள உரு-வது பக்கம்
உகூ	கஎ	வெழின்பதி	வெழின்மதி
௩உ	௩	ணீங்கித்	னீங்கித்
௩சு	கக	கருளு	கருணை
ஷெ	கஉ	சொச்சிவிஞ்	சொக்சவிஞ்
ஷெ	கச	விலகா	லிலகா
ஷெ	கஎ	லென்ளே	லென்னே
௩எ	க	தேவன் அதுமாக	தேவனதுமாக
ஷெ	க௩	யின்பச்	மின்ப
ஷெ	கச	சீதரு	மீதரு
ஷெ	கஅ	னென்றும்	னென்னும்
௩அ	கஎ	கீசனிஷ்	கிசகிஷ்

உ

ஓம் தத்ஸத்பிரஹ்மணே நம:

அதர்வவேதீய

கைவல்யோபநிடதம்.

ஸ்ரீ கணேசர்துதி.

||ஓம்|| சக்கிலாம் பாமுடுத்தோன் றுதிபெறு ✻✻ விஷ்ணுவென்போன்
மிக்காற் புயத்த னாளேன் †மிகமகிழ் வதன முள்ளோன்
சுக்கில சசியின் வண்ணன் சொல்லிய விவ்னை யெல்லா
விக்கின மொழியு மாறு விதியொடு தியானஞ் செய்வாம். (க)

ஸ்ரீ சாரதாஸ்துதி.

காணுநா லோர்க ரத்துங் கணிக்குமா லையோர்க ரத்தும்
வீணையோர் காத்துந் தாங்கி மெல்லவே மீட்டு வாளாய்
நாணுறு தின்சு ரத்தா னல்லிசை பாடு மந்த
வாணியை யன்பா னித்தம் வாழ்த்தியே வணங்கல் செய்வாம். (உ)

✻✻ வியாபகன். † மிகுபிர சன்ன துண்டன் என்றும் பாடம்.

ஸ்ரீஜகத்குரு சங்கராசாரியர்துதி.

* சங்கர வுருவ நீத்துச் சமைந்தவோர் வெண்மை செம்மைச்
† சங்கர படிக வண்ணச் சரீரம துடையோ னாகிச்
‡ சங்கர விலாத னிற்குந் தன்மையைக் கொண்ட தாலே
§ சங்கர னெனும்பேர் வாய்ந்தோன் || சரணமே சரண மாமால். (௧)

ஸ்ரீசற்குருஸ்துதி.

அந்தரத் தேவர் கோடி யனேகநாள் காத்தி ருக்க
அந்தர மேனி யானல் லருளினொ டுருவு கொண்டிங்
கந்தர முணர்ந்தி ருந்து மிணையடி முடிமேல் வைத்தான்
அந்தரம் மிலறவன் மேலா மருட்கொரு கைம்மா றுண்டோ. (௨)

ஸ்ரீநடேசர்துதி.

* பதஞ்சலியார் தமக்காச் செய்யும் பண்புடைய நடனங் காண்பான்
† பதஞ்சலியார் முனிவர் தேவர் பார்க்கின்றார் வந்து வந்து
‡ பதஞ்சலியா ரவரு மாடப் பணிவார்தம் பிறவி சாடப்
§ பதஞ்சலியா ரெனதுள் ளத்திற் || பதஞ்சலியா வைத்தான் வாரால்.

---

* சிவவுருவம் அல்லது சங்குமணி அரவாபரணம் தரிக்கும் உருவம். † கலப்புள்ள ‡ சம் = சுகத்தை, கரவிலாது = ஒளிக்காது. § சுகத்தைச் செய்பவன். || திருவடியே திருவடியாம் அல்லது திருவடியே எமக்குப் புகலிடமாம்.

* பதஞ்சலிமுனிவருக்காக அல்லது பதஞ்சலியாதவராய் நிஜானந்தத்தால் தம்பொருட்டாக. † பதஞ்சலியாதவர்களாய் முனிவரும் தேவரும் அல்லது பதஞ்சலியாகிய முனிவரும் தேவரும். ‡ கால் சலிக்காது நடேசரும் அல்லது பரவசத்தால் பதஞ்சலிமுனிவருமாட. § ஆடக்கால் சலியாதவர். || பதஞ்சலியாது வைத்து.

அதர்வவேதீய கைவல்யோபநிடதம்.

ஸ்ரீசிவகாமவல்லிஸ்துதி.

பூமகனுந் திருமாலும் பொன்னாட்டுப் புங்கவரும் புகழ்ந்து நிற்கத்
தேமருவும் பூஞ்சோலைத் தில்லையிற்செய் திருநடனஞ் செவ்வே காண்
பூமகளு நாமகளும் புவிமகளும் பொற்பதமே போற்ற வையன் [பாங்
வாமமதி னின்றிலகு சிவகாம வல்லியின்றாண் மனத்துட் கொள்வாம்.

ஸ்ரீசுப்பிரமணியர்துதி.

குகையெனு முள்ளந் தன்னிற் கூசிடா தொளித்தாய் நீயே
குகையினிற் றங்கி யுள்ளான் குமரனா மென்னும் வேதம்
குகனென வதனா லுன்னைக் கூறுவ ரெவரு மிங்கே
குகவென துள்ள மாய குகையினின் வெளியா வாயே. (எ)

நூற்பெயர்முதலியன.

பஞ்சருத் திரத்தி லொன்றாப் பகருகை வல்யந் தன்னைப்
பஞ்சவா நநத்தா னன்பர் பதந்தனை யுளத்திற் கொண்டு
செஞ்சொலாந் தமிழா லிங்குச் செப்புவ னிதனை மேலோர்
கிஞ்சுக மொழிபோற் கொண்டு கிளக்கிடு பொருளே காண்பார். (அ)

நூல்.

||ஓம்|| ஆசுவ லாய னன்றா னப்பர மேட்டி யாய
ஆசிலாப் பகவன் றன்ன தருகினிற் சென்று சொல்வான்
மாசிலாப் பகவ நீநல் வரிட்டமா யென்று மேலாந்
தேசுடை மகான்க டம்மாற் சேவிக்கப் படுவ தான (கூ)

கூடமாம் பிரம வித்தை கூறிடல் வேண்டு மைய
நீடுத லின்றி யாசு நிகழ்த்திய பாவ மெல்லாம்
ஓடியப் புருட னாய் வுயர்பரத் தின்ப ரத்தைக்
கூடிடு மாறு நன்கே கோதிலா வறிஞ னாவான் (௧௦)

அம்முனி தன்னை நோக்கி யப்பர மேட்டி சொல்வான்
எம்முனி களுக்கு மேலோ யியம்புவன் கேட்பாய் நன்கே
செம்மையாஞ் சிரத்தை பத்தி தியானமே யோக மென்னச்
சம்மத மாமி வற்றாற் சார்ந்திட லாகு மன்றே (௧௧)

நல்லவக் கருமத் தாலு நத்திடு மனைவி யாலும்
செல்லுமத் தனத்தி னாலுஞ் சேருதற் குரிய தன்றாம்
சொல்லிய வவற்றை யெல்லாந் துறத்தலா லொருவ னிங்கே
நல்லவவ் வமுதத் தன்மை நண்ணுவ னலம தாக (௧௨)

பரத்தொடு துன்பி லாதாய்ப் பண்புள குகையிற் செவ்வே
தரித்திட வைத்த தாகித் தனியொளிர் கின்ற தெஃதில்
பரத்தொடிவ் விகத்தின் போகப் பற்றினை விட்டோ ரான
கருத்துள வெதிகள் சென்று கலந்திடு வார்க ணன்கே (௧௩)

மறையின தந்த மாக வழங்குப நிடதந் தம்மின்
குறைவிலா விஞ்ஞா னத்தாற் கோதின்றிப் பொருட்டு ணிந்த
நிறைவுள வெதிக ளாவார் நேருசந் நியாச யோகத்
துறையுமச் சுத்த சத்வ முடையவ ராவ ரன்றே (௧௪)

* பிரமலோ கங்க டம்மிற் பேசிய வெகுக ளந்தப்
பிரமன தந்த காலப் பிரளய நேரும் போது
பரமநல் லமிர்த ராகிப் பரமுத்த ராவர் மீண்டும்
வருவதற் கில்லாத் தன்மை மருவியே நிற்பர் காணே (கரு)

ஒத்ததோர் தனியி டத்தி லுறுசுகா தனத்த னாகிச்
சுத்தனாய்ச் சமம தாகத் துளங்கிடாச் சிரமே கண்டம்
மத்திய சரீர மென்ப வளைந்திடா திருப்போ னாகி
அத்தியாச் சிரமத் தோனா யவாவுமிந் திரியம டக்கி (கசு)

பத்தியாற் றனதா சானைப் பணிந்துளக் கமலந் தன்னை
ரத்தூறு மழுக்கி லாதாய் நல்விசுத் தமாச்சிந் தித்து
மத்தியில் விசத மாகி மன்னுசோ கமில்லா தாகிச்
சித்தபா வனைக்கெட் டாதாய்த் தெரி † வியக்த மாகா தாகி

அந்தமில் சிவம தாகி யமைபிர சாந்த மாகி
அந்தமி லமுத மாகி யம்பிர மயோனி யாகி
அந்தமா திநடு வில்லா தாகியே கவிபு வாகி
அந்தமி லறிவா நந்த வரூபவற் புதம தாகி (கஎ)

---

* அவரவர் உபாசனைக்கேற்றபடி ஒரு பிரஹ்மலோகமே பல படித் தரமாய்த் தோற்றுதலின் பிரமலோகங்களி லென்று சுருதி பன்மையாற் கூறியது.

† வியக்தம்=வெளிப்பட்டது.

உமையவ ளிணைய தாகி யொண்பர மேச னாகி
நமையருள் பிரபு வாகி நல்லமுக் கண்ண னாகி
அமைகருங் கண்ட னாகி யமர்பிர சாந்த னாகி
அமைதரு மதனை நன்கே யருமுனி தியானஞ் செய்து (௧௯)

வருதலில் பூத யோனி மற்றெலா வற்றின் சாட்சி
இருளெனுந் தமசின் மேல தெனப்படு மதனைச் சேர்வான்
பிரமனே சம்பு போகி பிறப்பிலக் காத்தி னோடு
பரசுவ ராட்டு மாயோன் பரிபிரா ணன்கா லன்றீ (௨௰)

இரவினுக் கதிபன் பானு விறந்ததோ டாவ தென்னல்
இரசநா தனமே யென்னச் செப்பிடு மெல்லா மஃதே
வரமதா மதனை யோர்ந்து மரணம தொழிந்து நிற்பான்
பரமதா முத்திக் கிதே பகர்வழி வேறொன் றில்லை (௨௧)

சருவபூ தத்தி னுள்ளுந் தங்கிடு தனையு மந்தச்
சருவபூ தங்க டம்மைச் சாற்றிய தன்னி டத்தும்
உரமதாற் செவ்வே காண்போ னுயர்வுள பிரமந் தன்னைப்
பரமதாச் சேர்வா னேது பகரவே றிலதா மன்றே (௨௨)

ஆரணிய தாக வான்மா வதனின்மே லுறுவ தான
அரணியாப் பிரண வத்தை யாக்கியப் பியாச மென்னும்
உரமுள கடைத லாலே யுதித்திடு ஞானத் தீயால்
தரமுள பண்டி தன்றன் றகித்திடச் செய்வான் பாசம். (௨௩)

அன்னவன் றானே வஞ்ச மமைதரு மாயை யாலே
பின்னுறு மோக மூற்ற பெற்றிய வான்மா வாகி
மன்னுறுச் சரீரங் கொண்டு மருவியே யனைத்துஞ் செய்வான்
அன்னவன் றானே மாத ரன்னபா னாதி யான (உ௪)

பலவகைப் போகந் தம்மாற் பகுப்புள சாக்கி ரத்தில்
நலமிகப் பெறுவோ னாகி நண்ணுவன் றிருத்தி செவ்வே
வலியிலச் சீவன் றானே மன்னிய சொப்ப னத்தில்
கலிதரு தனது மாயா கற்பித சிவ லோகம் (உ௫)

மேவியங் குள்ள வாய மிகுசுகந் துயர்துய்ப் போனாய்
யாவுமே யொடுங்கு மந்த யாதனை யிலுறக் கத்தே
* ஆவர கமாவ தான வத்தமத் தினாழ்வோ னாகி
மேவுவன் சுகரூ பத்தை மீண்டுமச் சீவன் றானே (உ௬)

முந்திய பிறப்பிற் றாகி முந்துறு வினையோ கத்தால்
வந்துமே சாக்கி ரத்தின் மறுபடி யுறங்கு வானால்
அந்தமுப் புறங்க டம்மி லமர்ந்தவன் கிரீடை செய்வான்
அந்தவோர் சீவன் றன்னி னயதிவ் விசித்ர மெல்லாம் (உ௭)

அகில்வா தார வின்ப வகண்டபோ தமாமெ தன்கண்
புகுமொரு புரமுன் றும்போய்ப் புகன்றிடு மிதனி னின்றே
தருமுயிர் பிராண னோடு சார்மன மிந்தி யங்கள்
பருதவில் விண்ணே வாயு பற்றுதீ நீர்மண் ணுண்டாம் ( )

---

* ஆவரகம்=மறைப்பது.

எதுபரம் பிரம மாகு மிலகுசர் வான்மா வாகும்
விசுவத்திற் கிடம தாகு விரிமகத் தாநுட் பத்தின்
அதிகமா நுட்ப மாகு மழிவினித் தியமு மாகும்
அதுசொலு நீயே யாவை அந்தநீ தானே யஃதாம் (௨௯)

நனவொடு கனவு தூக்க நவின்றிடு மிவையே யாதி
கனபிர பஞ்சந் தன்னைக் காணுமா விளக்கு மெஃது
சொனவந்தப் பிரமந் தானே துயரிலா யானென் றோர்ந்து
முனமுறு பந்தந் தம்மின் முற்றுமே முத்த னாவன் (௩௰)

புரமொரு மூன்ற னுள்ளும் பொருந்துபோக் கியமே போக்
மருவிடு போக மென்னும் வகையுள வவற்றின் வேறாய் [தா
மருவிய வவற்றிற் கெல்லாம் வளந்தரு சாட்சி யாகி
அரியசின் மாத்ர மாகு மச்சதா சிவனான் காணே (௩௧)

என்னிலே யிந்த யாவு மெழில்பெறத் தோன்றா நிற்கும்
என்னிலே யிந்த யாவு மிலங்கியே நிலைப்ப வாகும்
என்னிலே யிந்த யாவு மிலகிடா தொழிந்து போகும்
அந்நியத் துவித மில்லா தாகுமப் பிரம நானே. (௩௨)

முதற்கண்டம் முடிந்தது ஓம்.

இரண்டாங்கண்டம்.

||ஓம்|| அணுவினு நுட்ப மாய வணுவுநா னேவ னந்த
அணுவினைப் போன்று மிக்க வதிபெரி தெனனு நானே
எணுவிசித் திரம தாய விவ்வெலா நானே யாவன்
எணவிலாப் பழையோ னேனே யெங்குமாம் புருட னேனே. ()

இகவிலா வீசா னன்யா னிரண்மயன் சிவரூ பன்யான்
உகிருறு கைகா லில்லே னுனலருஞ் சத்தி யுள்ளேன் [யேன்
தகுவிழி யிலனுய்க் காண்பேன் சாய்செவி யிலனுய்க் கேட்
பகுபடு வுருவ னுகிப் பலவுநன் குணரு கின்றேன். (கூச)

எனையுண ரவ்விதொன் றில்லை யென்றுநான் சித்தே யாவன்
பனுமறை யநேகந் தம்மாற் பகுத்துநன் கறியத் தக்கோன்
முனுமறை யந்தஞ் செய்தோன் மொழிமறை யுணர்வோ னேனே
வினையெனுந் தர்மா தர்ம மேவுற வெனக்கொன் றில்லை. (கூரு)

நாசமே பிறப்புத் தேக நணிந்தியம் புத்தி யில்லை
வாசமாம் பூநீ ரில்லை வந்நியும் வளியு மில்லை
ஆசிலம் பரமு மில்லை யாகுமிவ் வாறு ணர்ந்து
மாசிலாக் குகையி னுள்ளே வைத்திடப் பட்ட தாவி. (கூசு)

ஈனமார் கலையி லாதா யிணையிலத் விதிய வத்து
ஆனவிவ் வனைத்தின் சாட்சி யாகுசத் தசத்து மல்லா
ஊனமில் பரமான் மாவை யுணர்ந்திடு மவனச் சுத்த
ஞானமாம் பரமான் மாவை நண்ணிநின் றிலகா நிற்பன். ()

எவன்சத ருத்தி ரீய மியல்புட னோது கின்றான்
அவன்கன லதனிற் * பூத னாகுவன் வாயு பூதன்
அவன் மிக வான்ம பூத னாகுவன் சுராபா னத்தின்
அவன்மிகச் சுத்த னாவ னவன்பிர மகத்தி பூதன் (௩௮)

ஒருபொற் களவி னாலே யுழுவதிற் பூத னாவன்
ஆகுவ திஃது செய்தற் கலாதெனு மவற்றிற் பூதன்
ஆகுவ னதனா லேயவி முத்த மடுத்தோ னாவன்
ஓதுக பல்கா லல்ல தொருமுறை யிதனை நித்தம் (௩௯)

அத்தியாச் சிரமத் தோன்றா னடைகுவ னிதனா லிந்த
அத்திரப் பவம தாகு மாணவ மொழிக்கு ஞானம்
அத்தினா லிந்த வாறா யறிந்துமே யிதனை யன்னோன்
கத்தில்கை வல்யஞ் சேர்வான் கைவல்ய பதத்தைச் சேர்வான்.

இரண்டாம் கண்டம் முடிந்தது ஓம்.

ஓம் தத்ஸத் பிரஹ்மணேநம:

குருவினை யரிய வாரங் குவலயந் தனிலு தித்துக்
குருவின தருளார் ஞானக் கோதிலா நூலு ணர்ந்து
குருவின தருளே மேலாக் கொளுங்குணக் குப்பு சாமி
குருவின தருளா லிந்நூல் கூறினன் குருவே காக்க.

---

* பூதன் = பரிசுத்தன்.

வைதிக மார்க்க மென்றும் வையகத் தோங்கி வாழ்க
* சைவவே தாந்த விற்று றழைத்துநன் குறவே வாழ்க
தெய்வநல் லருளோங் காசான் றிருவடிப் போது வாழ்க
கைதவ மில்லார்க் குண்மை கழறிடும் பெரியோர் வாழ்க.

அதர்வவேதீய கைவல்யோபநிடதம்
முற்றியது ஓம்.

காட்டினி னரிகள் போலக் கத்திடு நூல்க ளெல்லாம்
வீட்டினை யளிக்கு மேன்மை மேவுவே தாந்த மென்னும்
நாட்டிகச் சிங்க மோங்கித் தகர்ந்திடக் கர்ச்சித் துண்மை
நாட்டிடு மளவு மப்பா ணண்ணுறு தொழியு மன்றே.

---

* சைவோபநிடதம்.

ஓம் தத்ஸத்ப்ரஹ்மணே நம:

யசுர்வேதத்து

* அமிருதபிந்தூபநிடதம்.

ஸ்ரீகணேசர்துதி.

॥ஓம்॥ அரிவர்க்க மென்று மணுகாவே நம்பாற்
கரிமுகவற் கைதொழூதக் கால். (க)

ஸ்ரீசரஸ்வதிதுதி.

வாணி பதத்தினைப் பாணி மலர்கொடு
மாணி னருச்சிநல் வாணி யருள்வளே. (உ)

ஸ்ரீஜகத்குரு சங்கராசாரியர்துதி.

சிங்கம் போலவே சிங [illegible] ங்களை
பங்கம் வாராமலே பரி [illegible] ரம்
எங்கு நாட்டின னே [illegible]
பொங்கு சங்கரன் [illegible] துவாம். (௩)

---

* பிரஹ்மபிந் [illegible] முகுவதுண்டு.

ஸ்ரீசற்குருஸ்துதி.

என்னிதய கமலத்தே யென்றுமிருந் தொளித்தானை யெனக்குக் காட்ட, மன்னியவோ ருருவுமிலான் கருணையி னன் மானுடமா முருவு கொண்டு, தன்னிகரி லற்புதமாஞ் சாந்தகுண சற்குருவாய்த் தரையில் வந்து, தன்னிருநற் பதமென்றன் றலைவைத்தான் றயாவினுக்குங் கைம்மா றுண்டோ. (௪)

ஸ்ரீநடேசர்ஸ்துதி.

சீராரு மலரவனுந் திருமாலுந் தேவர்களும்
பாராரும் புலிமுநியும் பதஞ்சலியுந் தொழுதேத்த
வாராரு முலையுமையாள் மருங்கினின்று காண்குறவே
ஏராருஞ் சிற்சபையி லெடுத்ததிரு வடிபணிவாம். (௫)

ஸ்ரீசிவகாமசுந்தரிஸ்துதி.

சிற்சபையி னடங்காணுந் திருமுகத்தி னொளிபோற்றி
சொற்சுவையின் மதுரமுறுந் தூயதிரு வாய்போற்றி
பொற்சிலம்பி னொலிபோற்றி பூசுரர்கள் தொழுதேத்தும்
சிற்சொருப சிவகாமி சேவடிக ளவைபோற்றி. (௬)

ஸ்ரீசுப்பிரமணியஸ்துதி.

பன்னிருதிண் புயமுங் கையும் பன்மணிகள் விளங்கு மார்பும்
பன்னிருகல் விழியுங் காதும் பவளவாயார் முகங்க ளாறும்
பன்னிருத ராவி யுண்ட படைகளொனுஞ் சத்தி வேலும்
பன்னிருபர் தேவ ரேத்து பதவிணையுங் காண வாராய். (௭)

நூற்பெயர்முதலியன.

எதிரிலா வெசுர்வே தத்தா மெழிலமு தபிந்து வென்னும்
இதவுப நிடதந் தன்னை யிங்குளா ரெவரு நோக்க
மதமுதற் குணங்க ளில்லா மாதவர் பதம்ப ணிந்து
முதுதமிழ் மொழியி னானே மொழிகுவன் முனிவர் காக்க ( )

நூல்.

||ஓம்|| மனமிரு வகைய தாகுஞ் சுத்த மசுத்த மென்றே
உனலறுங் காம மில்லா துயர்வுள சுத்த மாகும்
பினனுறு காம வெண்ணம் பிந்திய வசுத்த மாகும்
மனமதே பந்த மோக்க மருவுதற் கேது வாமால் (௯)

விடயத்தைப் பற்று மஃதே விடுதலில் கட்டிற் காகும்
விடயத்தைப் பற்றா வஃதே வீடுற வேது வாகும்
விடயத்தை விட்ட விந்த மென்மனந் தனக்கே முத்தி
கிடைத்திடு மென்று மேலோர் கிளந்தது கொண்ட தாலே ( )

நித்திய முமுக்ஷு வாவா னிர்விடய மாக்கல் வேண்டும்
நத்திடு விடயப் பற்று நசித்துளந் தன்னிற் செவ்வே
ஒத்தொடுங் கிமன மெப்போ துன்மனீ பாவ மெய்தும்
அத்திறக் காலத் தஃதே யடைபர பதம தாகும் (கக)

எதுவரை சென்று ளத்தி லெழுந்திடா தொழிந்து போகும்
அதுவரை மனத்தை நன்கே யடக்கிடல் வேண்டு மெல்ல
இதுபர ஞான மாகு மிதுபர முத்தி யாகும்
இதுவலா வேளை யாவு மெய்நூல் விரிவே யாமால். (கஉ)

சிந்திய மாவ தன்று சிந்திய மாகா தன்று
சிந்திய மாகு மஃதே சிந்திய மாகா தாகும்
சந்துறு பட்ச பாதஞ் சார்ந்திடா திருப்ப தாகும்
அந்தவோர் பிரம மப்போ தடைந்திடப் படுமா னன்கே. ()

* சுரத்தொடு யோகந் தன்னைச் சுத்தமாய்ப் பயில வேண்டும்
பரத்தினைச் சுரமில் லாதாப் பாவனை செய்தல் வேண்டும்
திருத்தமாஞ் சுரமில் லாதாச் செப்புபா வந்தன் னாலாம்
பரத்தினைப் பாவந் தானே பாவமி லதாகா தாகும் (௧௪)

ஆன வதுவே நிட்களமு மாகும் விகற்ப மில்லதுவும்
ஊன மில்லா நிரஞ்சனமு முற்ற பிரம மாகுமிங்கு
நானே யந்தப் பிரமமென நலமா யோர்ந்து தேர்ந்திடிலோ
மான பிரமந் தனைநன்கே மருவி நிற்ப னிச்சயமாய். (௧௫)

என்றுமொரு விகற்பமிலா வகந்தமாகி ஏதுவொடு திட்டாந் தங்கள்
துன்றுறுதா யளவையினுக் கெட்டாதாய்த் தோற்றமுத லில்லா தாகி
நன்றுறும் பரமமாகுஞ் சிவமதனை நன்குணர்ந்தா * னிரோத மில்லை
பொன்றுறுமுற் பத்தியில்லை † வந்தியனும் புகலுறுசா ‡ சனமு மில்லை

---

* சுரம் = உயிரெழுத்தோடுகூடிய பிரணவம். சுரமில்லாதது = மகாரமாத்திரப்பிரணவம்.

* நிரோதம் = ஒடுக்கம். † வந்தியன் = வணங்கப்படுபவன். பெத்தனென்றும் பாடமுண்டு. ‡ சாசனம் = ஆணை; சாதகனென்றும் பாடமுண்டு.

* முத்தியின் விருப்ப மில்லை முத்தியு மில்லா தாகும்
இத்திற மாய விஃதே யியல்பர மார்த்தத் தன்மை
முத்திற வவத்தை, யுள்ளு முன்னுக வொன்றென் றுன்மா
முத்தலங் கடந்தோ னுக்கு முள்பிறப் பில்லை மீண்டும். (கஎ)

ஒருவனே பூத வான்மா வுளனெலாப் பூதத் துள்ளும்
ஒருவகை பல்வ கையா வொளிர்வனீ ரிந்து போலத்
தருகுட விசும்பு தானுந் தாங்குமக் குடமு டைந்தும்
ஒருவித மில்லை யாங்கே யுணருக தேகத் தான்மா. (கஅ)

கடமது போல விங்குக் கருதுபல் வகையா காரம்
அடைவதாய் மீண்டு மீண்டு மநேகமா வேறு பட்டும்
† கெடுதலி லதனை யாவன் கெட்டதா வறிய மாட்டான்
திடமுள வவனே நித்தந் தெரிபவ னுவ னத்தை. (கசு)

எத்துணைச் சத்தமாயை யிவன்றனை மறைத் திருக்கும்
அத்துணைப் புட்கலத்தி லமர்ந்துமே நிற்பா னன்றி
அத்தமந் தானு மில்லா தழிவினை யடைந்த போது
கத்திலா வொருமை யொன்றே காண்பவ னுகின் றுனல். (உ0)

சத்த மென்னு மக்கரமே சாற்று மபரம் பிரமமாகும்
எத்தி னுச மெய்துகாலை யெஃது நல்ல வக்கரமாம்
சுத்த வந்த வக்கரத்தைத் தூய மனதாற் றியானிக்க
வித்தை யுள்ளோன் றனக்குமிக மேன்மை மேவு சாந்திவேண்டின் ()

---

* முத்தியின் காமனில்லை முத்தனுமில்லை யாகும் என்றும் பாடம்.

† கடமது நசித்த போது கண்டில னெவன்பேதத்தை என்றும் பாடம்.

வித்தையு மிரண்டா மிங்கு மேவிநன் கறியற் பால
சத்தமாம் பிரம மொன்று தனிப்பர மொன்று மாகும்
சத்தமாம் பிரமந் தன்னைச் சார்ந்ததன் கரைக டந்தோன்
சுத்தமா யிலகா நின்ற தொல்பரம் பிரமஞ் சேர்வான். (உஉ)

ஞான நூல் பழகி நன்கே நல்லறி வாளன் மேலாம்
ஞானவிஞ் ஞானந் தம்மி னல்லதற் பரனே யாகி
தானிய விருப்ப முள்ளான் றுளினைத் தள்ளல் போல
ஞானியு நூல்க ளெல்லா நத்திடா தொழிப்பான் காணே. ()

பலநிற முடைய வாகும் பசுக்களிற் கறந்த பாலும்
பலநிற மெய்த லின்றிப் பகரொரு நிறத்த தாகும்
இலகிடு ஞானந் தன்னை யியம்பிய பாலே போலும்
இலிங்கிக டம்மை யந்த வியல்பசு தாமாக் காண்க. (உச)

பொங்குறு பாலிற் றோன்றுப் பொதிந்திடு நெய்யே போலத்
தங்கிடும் விஞ்ஞா னந்தான் சார்புள பூதந் தோறும்
மங்குறுச் சுத்த மாய மனதெனு மத்தி னாலே
நன்குறக் கடைதல் வேண்டு நல்லறி வுடையோ னென்றும்()

ஞானமா நேத்தி ரத்தை நன்குறக் கொண்டே ளுகி
மானமார் பெரிய தான மகிழ்பர பதந் தாகி
ஈனமாங் கலைக ளின்றி யிழிமல மில்லாச் சாந்தம்
ஆனவம் பிரம நானென் றமைவொடு கருதல் வேண்டும். ()

சருவபூதங் கடம்மை யென்றுஞ் சார்ந்திடுவ தலாதா யப்பால்
மருவலுற வசிப்ப தாயு மற்றுமந்தப் பூதந் தம்மில்
மருவலுற வசிப்ப தெஃது மாவருளைச் செய்தற் காக
மருவிலங்நான் வாசு தேவன் மருவிலங்நான் வாசு தேவன்.

முற்றியது ஓம்.

வேங்கட மலையான் றன்பான் மெத்தவும் வருந்தி வேண்டி
வேங்கடன் றவத்தாற் பெற்ற மென்குணக் குப்பு சாமி
வேங்கடத் தென்றி சைக்கண் விளங்கிடு மொழியி னனே
வேங்கடம் வாரா வண்ணம் விளம்பினு னிந்த நூலை.

ஓங்கியே வாழ்க விந்நூ லொண்குரு வீசன் வாழ்க
பாங்குற விந்நூ றன்னைப் படிப்பவர் கேட்போர் வாழ்க
ஈங்கிதன் பொருளை யோர்ந்துள் ளின்புறு மவரும் வாழ்க
தாங்கலின் மனத்த ரான சகலரும் வாழ்க வாழ்க.

யஜுர்வேதத்து அமிர்தபிந்தூபநிடதம்

முடிந்தது.

ஓம்தத்ஸத்பிரஹ்மணே நம:

ஓம்.

ஓம் தத்ஸத் பிரஹ்மணேநம:

யசுர்வேத

சுகரகசியோபநிடதம்.

மங்கலம்.

ஸ்ரீவிநாயகர்துதி.

எந்த நாளு மிடருறு தேகிடப்
பந்த பாசம் பற்றுறு தொழிந்திடத்
தந்தி மாமுகத் தற்பர னற்பதஞ்
சொந்த மாகத் துதித்திடு வாமரோ. (௧)

ஸ்ரீசரஸ்வதிதுதி.

எவளதின் னருளான் மேலா மின்கவி பாடு வார்கள்
எவளதின் னருளா லீண்டே யெழினலந் துய்த்தல் செய்வார்
எவளதின் னருளான் முத்தி யின்பமிங் கெய்தா நிற்பர்
அவளை மதெளிய நாவி லமர்ந்திடத் துதித்தல் செய்வாம். (௨)

ஸ்ரீஜகத்குரு சங்கராசாரியர்துதி.

அங்கணன் கைலை விட்டிவ் வவனியி லவதரித்து
நங்குரு மரபிற் கெல்லா முதற்குரு நாதனுகி
எங்கணும் வேத மார்க்க மெழில்பெறச் செய்தா னங்கச்
சங்கர பகவற் பாத சம்புதாண் முடிமேற் கொள்வாம். (௩)

ஸ்ரீசற்குருஸ்துதி.

எந்தவோர் வடிவு மின்றி யிலகிடு சித்தே யன்பாற்
சுந்தர மேனி தாங்கித் துதிபெறு விஷ்ணு வென்ன
வந்தவவ் வாசான் பாத மலர்முடிக் கணிய தாக்கத்
தந்திர மார்க்க மெல்லாந் தழைத்திடா தொழிந்து போமால்.

ஸ்ரீநடேசர்துதி.

பதஞ்சலி யார்காண் பானீ பரமவா நந்தத் தானின்
பதஞ்சலி யாதே யாடும் பான்மையு மிதே யுன்றன்
பதஞ்சலி யாது பார்க்கும் பரிசனக் களித்த லோடென்
பதஞ்சலி யாது நின்னைப் பணிந்திடு வரமு மீவாய். (ரு)

புலியுரி யுடுத்து நீசெம் பொன்பொலி யம்பலத்தே
புலிமுநி நின்று காணப் புரிநட மழகி தந்தோ
புலிமுநி புதல்வற் கன்று புகலுபாற் கடல தீந்தாய்
புலிமுநி கண்ட பாதம் புன்மையேன் றனக்கு மீவாய். (சு)

ஸ்ரீசிவகாமிவல்லியார்துதி.

அச்சுதன் றங்கை யென்றே யவனியோர் சொல்லக் கேட்டும்
அச்சுத னங்கோர் பக்க லயர்வொடு துயிலக் கண்டும்
மெச்சுகன் பதியின் பாலே வியனடங் கண்டு நிற்கும்
அச்சிவ காம வல்லி யரும்பத முளத்திற் கொள்வாம். (எ)

ஸ்ரீசுப்பிரமணியர்துதி.

பந்தன முலையாள் வள்ளி பான்மொழித் தேவ சேனை
சந்தனக் குழம்பு பூசிச் சாமரம் வீசா நிற்க
நந்தம திடரைத் தீர்ப்பா னன்கெழுந் தருளு மந்தக்
கந்தவேள் கருணைக் கிங்கோர் கரையது முண்டோ சொல்லீர்

நூற்பெயர் முதலியன.

சுகரக சியமா வீசன் சொல்லுப நிடதந் தன்னைச்
சுகமுட னெவரு மோதிச் சுகித்திடு மாறு நன்கே
அகமதி லடியார் பாத வணிமலர் சிந்தை செய்து
சுகமுறு தமிழா னீண்டுச் சொல்லுவன் சமிக்க மேலோர். ()

நூலாரம்பம்.

இனியதன் பின்வி ரித்திங் கெடுத்துரைத் திடுவாஞ் செவ்வே
தனியிருந் துசாவ லுற்றூர் சர்வதே வரிடி கள்சென்ம
றினிதுவீற் றிருக்கு மந்த விறைவனும் பிரமன் முன்னே
நனிபணிந் தன்பு மிக்கு நன்குறப் பூசை செய்தே. (க0)

பகவனே நீயெ மக்குப் பகர்ந்திடல் வேண்டு மைய
தகுமிர கசியப் பேராற் சாற்றுப நிடத மென்ன
முகமலர்ந் தயனு மஃது மொழிந்திட லானன் கேளீர்
அகமுக மாகி யுள்ள மசைந்திடா திருந்து நீங்கள். (கக)

முன்னொரு காலத் தந்த முநிவனும் வியாசப் பேரோன்
மன்னுமா தேஜ சுள்ளான் மறைவல்லான் றவத்தின் மிக்கான்
தன்னிக ரில்லாச் சாம்ப சதாசிவ னடிகள் போற்றித்
தன்னிரு கரங்கு வித்துச் சாற்றுவன் விநயத் தோடே. ()

வேதவி யாத னென்னு மெய்ம்முநி வார்த்தை யீதாம்
நாதனே தேவ தேவ நன்மகாப் பிராஞ்ஞ சீவர் [டோய்
பாசம தொழிக்கும் வேலை பரமநன் ஞானன்பாக் கொண்
சூதிலென் சுதனு மிந்தச் சுகன்றனக் குரிய தான. (கங)

வேதசம்ஸ் கார கர்மம் விதிப்படி செய்யுங் காலை
நாதபி ரமோப தேச நவிலுமக் கால நேர்ந்த
தாதலா துலகிற் கெல்லா மாதியாங் குரவ நீயே
ஓதிடல் வேண்டு மந்த வுண்மையா முபதே சத்தை. (கச)

என்றநு மீசன் சொல்வா னென்றுமே யுளதா யெங்குந்
துன்றிடு பிரம மாகச் சொல்லுகை வல்யந் தன்னை
நன்றுநா னுபதே சிக்கி னல்லவை ராக்கி யத்தா
லின்றெலாம் விட்டுத் தானு யிலகொளி யதனைச் சார்வான். ()

இவ்வண முரைப்பக் கேட்டவ் விகலிலா வியாதன் சொல்
எவ்வண மாவ தான வியல்புநா னுள்ள தாமோ]வான்
அவ்வண மாத னன்கே வவ்வுப நாய னத்தில்
உப்வணம் பிரம நின்னு னுரைத்திடப் பட்ட போது. (கரு)

உன்னுடைப் பிரசா தத்தா னுயர்சரு வஞ்ஞ னாக
என்னுடைப் புதல்வ னாய விச்சுகன் றானு மைய
நின்னுடைப் பிரசா தத்தா னேர்ந்தவத் தன்மை யோனாய்
நின்னுடை முத்தி நான்கு நேர்ந்தன னாக வன்றே. (௧௭)

இந்தவா றெழில்வி யாத னியம்பிய வசனங் கேட்டே
எந்தமைக் காக்குந் தேவ விருடியர் சபையின் கண்ணே
அந்தமில் சம்பு வான வழகுறு மம்மை பாகன்
அந்தவா றுபதே சிக்க வரியவா தனத்தி ருந்தான். (௧௮)

அச்சமில் வியாதன் சேயா மக்கிருத கிருத்தி யன்மேன்
மெச்சிடு பத்தி மானாய் மெல்லவந் திருந்தா னங்கே
அச்சிவ னருளாற் பெற்றா னருமையாம் பிரண வத்தை
மெய்ச்சிவன் றன்னை நோக்கி மீண்டுமீ துரைக்க லுற்றான். ()

சச்சிதா நந்த ரூப சருவமு நன்கு ணர்வோய்
மெச்சுதே வாதி தேவ மேன்மையா யுளபூ தேச
நச்சுமா ரமண சம்போ நற்றயா நிதியே யென்றும்
இச்சையில் பரமே சான வீண்டுநீ மகிழ்வா யையா. (௨௦)

பிரணவத் துளதாய் மேலாப் பிறங்கிடு பிரம மீண்டுப்
பரமதா யுபதே சிக்கப் பட்டதா மேலைவேதச்
சிரமதில் விளங்கு மந்தத் திகடத்துவ மசியா தி
வரமகா வாக்கி யத்தின் வளமுறு * மாறங் கத்தை. (௨௧)

---

* ஆதிசப்தத்தால் சந்தசு, தேவதை, பீசம், சக்தி, கிலகம், விநி யோகம், நியாசம், தியானமென்பன கொள்ளப்படும்.

சிறப்பொடு கேட்க யானுஞ் சிந்தனை செய்தே னையா
முறைப்படி யுண்மை யாக முநிவின்றிக் கிருபை யோடு
முரைத்திடல் வேண்டு மேலா யுளவிர கசிய மெல்லா
மிறைக்குண தயையின் மிக்கோ யெழிற்சதா சிவனே யீசா.

என்றவிவ் வசனங் கேட்டவ் வீசனங் கியம்ப லுற்றான்
நன்றுநன் றுசுக மேலாம் ஞானநன் னிதியா மைந்த
குன்றுறு மகாப்பி ராஞ்ஞ கோதிலா முநியே தீர
இன்றுநீ வேதத் துள்ளா மிரகசிய வுண்மை கேட்டாய். ()

இதுமிகக் கேட்கற் பாற்று மிரகசி யப்பே ரித்தால்
அதுகுறை யிலங்க த்தோடு மறைந்திடப் படுமா னின்பால்
எதனது விஞ்ஞா னத்தா னெய்தரு மேலா முத்தி
அதனைநன் கடைவ ரென்றற் கற்பமு மையமில்லை. (உ௪)

அங்கம தில்லா தாக வம்மகா வாக்கி யத்தைச்
சங்கையி றேசி கன்றான் சாற்றொணு தாத லானே
இங்குமா வாக்கி யங்க ளிருடியா † தியவற் றோடும்
அங்கம துடைய வாக வறைந்திடப் படுவ வாமால். (உரு)

இருக்கெசுர் சாமா தர்வ மென்னுநால் வேதத் துள்ளுந்
திருக்கிலா வுபநி டத்துச் சிரமென விளங்கு மாங்கே
திருத்தமா முபநி டத்துட் சிரமிர கசியப் பேரைப்
பொருத்தமாப் பெற்ற விந்தப் புகழுப நிடத மையா. (உசு)

---

† இருடியாதியாறும், கரநியாசமாறும், அங்கநியாசமாறு மிங்கு ஆரங்கமெனப்படும்.

இரகசி யப்பே ரெய்து மிப்பிர மத்தை யாவன்
உரமொடு தியானஞ் செய்வா னுணர்வுள வவனுக் கிங்கே
சுருதமே ஐப்யந் தீர்த்தஞ் சொல்லுமந் திரமே யென்னும்
கருதிடு புண்ணி யத்தின் கார ணமவற் றாலென்னே. (உஎ)
அரியமா வாக்கி யத்தி னரும்பொருள் விசாரத் தாலே
உரியதாப் பெறுவ தான வுயர்பயன் மடங்கு நூறு
இருடியா தியவற் றோடு மேற்குமத் தியானத் தோடும்
ஒருமுறை செபித்த லாலே யுற்றிடப் படுவ தாகும். (உஅ)
சுகரக சியத்தின் கண்ணே சொல்லுமம் மந்தி ரத்தைத்
தருபர மாஞ்ச னுக்கே சாற்றிடல் வேண்டு மல்லால்
தகுதியில் விடய லோல சந்நியா சிக்கஃ தீயின்
புகுவனே நரக மன்னோன் புகன்றவச் சீட னோடும். (உகூ)
அங்கமா தியவற் றோடா மம்மகா வாக்கி யங்கள்
தங்கவா ரியமாஞ் சொல்லாற் சொல்லுதற் குரிய வன்றி
இங்கவை தமிழாற் சொல்லற் கிசைந்தில வெனவே விட்டாம்
அங்குள வாக்கி யார்த்த மறைந்திடப் படுமான் மேலே. ()

க. பிரஞ்ஞானம் பிரஹ்மம்.

எதுதனு லுருவங் காண்பா னெதுதனாற் கேட்பான் சத்தம்
முகருவ னெதனாற் கந்த மொழிகுவ னெதனாற் சொல்லை
மிகுருசி யருசி யென்று விசேடமா யுணர்வ னெத்தால்
அதுபிரஞ் ஞான மென்ன வறைந்திடப் படுமா லிங்கே. ()

சதுமுகன் மகவா ஞாதி சாற்றுமத் தேவ ருள்ளும்
கதிபெறு மனிதன் மாவா கானடை யாதி யுள்ளும்
பொதியொரு சேத னந்தான் புகன்றிடு பிரமமாகும்
அதுகொடப் பிரம மென்பா லறிபிரஞ் ஞான மாமே. (௩௨)

உ. அகம்பிரமாஸ்மி.

பூரண பரம வான்மா பொருந்துஞா ஞாதி கார
காரண மாவ தாகக் கழறுமித் தேகத் துள்ளே
பூரண சாட்சி யாகப் புகுந்துநின் றிலகு மந்தக்
காரண மதனு வித்தைக் கனவக மென்பர் தானுய். (௩௩)

பூரண பரமான் மாவைப் புகழ்பெறு பிரம மென்றிங்
காரண மொழிதா னன்கே யறைந்திடு மஸ்மி யென்றல்
ஓரெணின் றன்மை யான வொருமையை யுணர்த்து மத்தால்
பூரணப் பிரம நானுப் பொருந்தியே நிற்பே னென்றும். ()

௩. தத்துவமஸி.

ஏகமே வாத்வி தீய மென்றிடும் பிரம சத்தே
போகுமோர் நாம ரூபம் பொருந்திடா திருந்த திந்தத்
தேகமே முதலா மெல்லாச் சிருட்டியின் முன்னே யின்றும்
ஏகமா மிதனைத் தன்மை யியம்பிடப் படுந்தத் தென்றே. ()

உரையுப தேசங் கேட்பா னுடலொடிந் தியமே யாதி
உரைபொரு ளவற்றின் மேலா மொருபொரு டானே யிங்குச்
சுருதியிற் றுவம்ப தத்தாற் சொலப்படு மசியே கத்வம்
தெரிதா நின்ற தத்தைத் தேர்ந்துநீ யநுப விப்பாய். (௩௫)

௪. அயமாத்மாபிரஹ்ம.

சொப்பிர காச மாகத் துலங்கிடு மப்ரோட் சத்வம்
ஒப்புவ ரயமென் றிங்கே யுரைத்திடு மொழியி னானே
தப்பகங் கார மாதி சரீரவந் தத்தி னுள்ளாம்
இப்பிரத் தியகங்கே வான்மா வென்றுரைத் திடுவ தாகும். ()

இதுவெனச் சுட்டிக் காணு மிவ்வெலா வுலகந் தன்னின்
முதுபொருட் டத்து வத்தை மொழிந்தது பிரமச் சொல்லால்
அதுகொடு தெரிந்து கொண்மி னந்தவோர் பிரமந் தானே
அதிசுவப் பிரகா சான்ம வறிவுரு வாகு மென்றே. (௩௭)

அவ்வகான்ம திருட்டி யாலே யவிவேக வுறக்க முற்றேன்
இவ்வெனது நாமனன் னும்பொய் யிலகுகணுக் கதியு முற்றேன்
அவ்வொருமா வாக்ய மென்னு மாசிரிய னருள் வாக் கானே
செவ்விதொளிர் சொரூப பாநு சிறந்துதிக்க விழித்தேன் யானே. ()

வாச்சியந் தனக்கி ரண்டு வகைப்பொரு ளொழுங்க தாகும்
வாச்சிய மிலக்ஷ்ய மென்றே வகுத்திடு துவம்ப தத்தில்
வாச்சியம் பூத கார்ய மற்றுமிந் தியாதி யாகும்
பூச்சிய விலக்கி யந்தான் பொருந்துமத் துவம்ப தார்த்தம்.

ஈசன தியல்பா னுய வெழின்பதி வாச்ய மாகும்
பேசுசச் சிதாநந் தநற் பிரமமே விலக்கி யமாம்
ஆசிறற் பதத்தி னர்த்த மறைந்திடப் பட்ட வீதாம்
பேசுமவ் விரண்ட னைக்யம் பிந்திய வசிப தத்தாம். (௪௦)

காரிய வுபாதி யோடு காரண வுபாதி யுண்டேல்
சீரிய ஜீவந்தத் தென்று செப்பிரு வகையா மின்றேல்
ஓரியற் சச்சித் தின்ப வுருவென மொன்றே யாகும்
ஓரிரு வசன வேதங் குறைத்திடு தேசங் காலம். (௪௧)

ஆயவத் தேசங் கால மனைத்தையும் விட்டு மேலே
ஏயவப் பொருளை நோக்கி னேகமா மிரண்டா காது
காயம தொன்றே யென்னுங் கருத்தினு லுலகர் தம்முன்
ஆயவித் தேவ தத்த னவனென மொழிதல் போல. (௪௨)

காரிய வுபாதி யுள்ளோன் கட்டுறு மிந்தச் சீவன்
காரண வுபாதி யுள்ளோன் கட்டுறு வந்த வீசன்
காரியத் தன்மை யோடு காரணத் தன்மை விட்டால்
பூரண போத மிங்குப் பொங்கியே யெஞ்சி நிற்கும். (௪௩)

நற்சிர வணமே கேட்ட னல்லவா சிரியன் முன்னர்
சொற்பொரு ளாய்த லாகச் சொல்லிடு மனனம் பின்னும்
நிற்பதப் பொருளி லென்ற னிதித்தியா சனமிம் மூன்றும்
தற்பரி பூர்ண ஞான சாதன மாகு மன்றே. (௪௪)

அந்நிய வித்தை நன்கே யறிந்திடு மதுதா னிங்கு
மன்னுத லின்றிச் சற்று மடிதல வசிய மேயாம்
சொன்னவப் பிரம வித்தை துணிந்திடு மதுதா னென்றும்
மன்னிடு பிரமந் தானு வாய்த்திடற் காக நிற்கும். (௪௫)

அங்கம தாற் றேடு மம்மகா வாக்கி யத்தை
துங்கவப் பிரமன் சொன்ன தூயநல் வசனம் போலும்
இங்குப தேசஞ் செய்க வியல்புள தேசி கன்றான்
அங்கமா திகளை விட்டிங் கறைந்திட லாகா தென்றும். (௪௬)

ஈசனங் குரைக்க லுற்று னெம்முநி களுக்கு மேலோய்
பேசிர கசிய நாமம் பெறுமுப நிடதந் தன்னைக்
கூசிடா துரைத்தே னந்தக் குற்றமில் வியாதப் பேரோன்
பேசிடு பிரம வாதி பிதாவினுற் றாண்டப் பட்டே. (சஎ)

அத்தினுற் சத்துச் சித்தே தா டதிசுக வடிவ மான
முத்தமாம் பிர்மஞ் செவ்வே மொழிந்திடப் பட்ட தென்றும்
நித்தனுய்த் தியானஞ் செய்து நிலவுல கதனிற் சீவன்
முத்தனு யிருந்து கொண்டு முநிவர வுலவு வாயே. (சஅ)

சுருதியின் முதலி லெந்தச் சுரஞ்சொலப் படுவ தாகும்
சுருதியி னந்தத் தெஃது தூன்றியே நிலைப்ப தந்தப்
பிரகிரு தியின மாகப் பேசிடு பொருட்கு மேலே
வரனெனப் படுவோன் யாவன் மகேச்சுர னவனே யாவன்.

சிவன்முகத் துபதே சந்தான் சிறப்புடன் பெற்ற தாலே
அவன்மயத் தன்மை தன்னை யடைந்ததிவ் வுலக மெல்லாம்
அவன்பினே யெழுந்து நின்றங் கருளுரு வான வந்தச்
சிவன்பதம் வணங்கி யாவுந் தீரவே விட்டோ னுகி. (ருo)

சென்றனன் பரப்பி ரஹ்மத் திகழ்பயோ நிதியின் கண்ணே
நன்றுற நீந்து வான்போ ணடந்திடு மவனை யாங்கே
கண்டனன் முநிவ னுமக் கருந்துவை பாய னன்பின்
சென்றழைத் திட்டா னந்தச் சேய்பிரி வாற்று னுகி. (ருக)

அழைத்திடு வியாத னுய வம்முநி சத்தங் கேட்டுத்
தழைத்திடு தாவ ரங்கள் சங்கம மான வெல்லாம்
பிழைத்திடா தொலித்த வந்தப் பேரொலி கேட்டுச் சேயின்
குழைத்திடு மன்பா லன்னேன் கூறினு னின்பம் பெற்றுன்.

இரகசி யப்பே ருள்ள விவ்வுப நிடதந் தன்னைக்
குருவனுக் கிரகத் தாலே குறைவற வோது மன்னோன்
சருவபா வத்தி னீங்கித் தனிப்பத மடைவன் மேலே
கருவொழி கைவல்யஞ் சார்வன் கனவுப நிடத்திவ் வாறும்.

ஓம்தத்ஸத் பிரஹ்மணேநம:

ஓமெனு மந்தத் தத்தே யுள்தெனு மந்தச் சத்தாம்
காணுள னெனுமச் சத்தே நலமிகு பிரம மாகும்
காமெனு முடலே யாதி நசுவர மாகு மிவ்வா
றுமிதை நித்த நன்கே யாய்ந்திடி லதுவே யாவர்.

பஞ்சவா னனத்தான் செய்ய பதந்தனை யுளத்திற் கொண்டு
தஞ்சமாந் தற்ப தத்தைச் சார்ந்துமே நிற்பா னென்றும்
தஞ்சைவாழ் குப்பு சாமி சாற்றின னிந்த நூலைத்
துஞ்சுத லிலாத வின்பந் துய்த்திளைப் பாறு மாறே.

இச்சுக ரகசி யப்பே ரிசையுப நிடதந் தன்னை
எச்சுக விருப்பா னித்த மினிமையாய்ப் படிப்பார் கேட்பார்
அச்சுக மடைத லோடவ் வருத்தமு முணர்ந்து நின்றால்
மெய்ச்சுக முத்தி யெய்தி மீண்டுமே வாரார் கண்டீர்.

அவனியி லிந்த மெய்ந்நூ லருகிடா தென்றும் வாழி
பவமதை யொழிக்கு மாறு படிப்பவர் கேட்போர் வாழி
சிவவுரு வாய வாசான் சீரடிக் கமலம் வாழி
அவனடி வழியா வந்தா ரனைவரும் வாழி வாழி.

முற்றிற்று.

ஓம்

யஜுர்வேத சுகரகசியோபநிடத்திலுள்ள

மகாவாக்கிய மகாமந்திரத்தின் தியானம்.

பிரமவா நந்த மாகிப் பிறங்கிடு பொருள தாகிப்
பரமவா நந்த மீயும் பான்மைய தாகி யென்றும்
வரமதா ஞான மேயோர் வடிவமாய் விச்சு வத்தின்
பரமதா யெங்கு மாகப் பரவுமா காயம் போலாய். (க)

தத்துவ மசியே யாதி சருவவாக் கியங்க டம்மின்
தத்துவ விலக்கி யத்தைச் சார்ந்திடு மேக மாகி
நித்திய விமல மாகி நிகழ்ந்திடு சலிப்பி லாதாய்
எத்தரப் புத்தி கட்கு மிலகிடு சாட்சி யாகி. (உ)

சித்தபா வனைக ளென்றுஞ் சேர்ந்திடா தொளிர்வ தாகி
முத்தரக் குணங்கண் முற்று மோதிடா திலகு மந்தச்
சுத்தநற் குரவன் றாய துணைமலர்ப் பாத மேலாம்
பத்தியாற் பரவி நாளும் பணிந்திடல் செய்கு வாமால். (ங)

ஷ தத்பதமகாமந்திரத்தின் தியானம்.

ஞானமே ஞேய மெல்லா ஞானகம் மியத்த தீதம்
மோனமாஞ் சுத்தம் புத்த முத்தமவ் வியயஞ் சத்யம்
ஞானசச் சித்தா மின்ப நல்வடி வினதென் றிவ்வா
றூனவிம் * மகசாந் தேவை யன்பொடு தியானஞ் செய்க.(க)

ஷ துவம்பதமகாமந்திரத்தின் தியானம்.

சருவபூ தங்க டம்மின் றங்குசீ வத்து வத்தோ
டுருவமா யெவ்வி டத்து மகண்டவிக் கிரக மாகிக்
கருதுசித் தாகங் கார காரண நியந்தா வாகி
உரியதாஞ் சீ வப்பேரை யுறுதுவம் பதத்தைப் போற்றே. ()

ஷ அசிபதமகாமந்திரத்தின் தியானம்.

சீவனே பிரம மென்று செப்புவாக் கியார்த்தந் தன்னில்
பாவமா மனத்தின் றன்மை பதிந்திடு மளவு மைக்ய
மாவதாந் தத்து வத்தை யங்கில யமாகச் செய்து
மேவிலசிப தத்தை யொழிவின்றித் தியானஞ் செய்க. (க)

ஓம்.

---

* மகசு = பிரகாரம்.

ஓம்தத்ஸத்.

யஜுர்வேதீய

ஸ்கந்தோபநிடதம்.

கணேசர்துதி.

எப்போது மேத்தி யிடாகலச் செய்திடுவாம்
கைப்போ தகத்தின் கழல்.

நாமகள்துதி.

பாணியினிற் பூவேந்திப் பலகாலு மருச்சிப்பாம்
வாணியின்றன் மென்றாண் மலர்.

ஸ்ரீசங்கரபகவத் பாதாசாரியர் துதி.

சிங்கம் போன் மாய்த்து மதஞ் சீராரு நங்குருவாம்
சங்கரன்றன் மென்றாள் சரண்.

ஸ்ரீசற்குருதுதி.

சொற்கொண்டு காணரிய தொல்பொருளைத் தோற்றுவிக்கும்
சற்குருவின் செய்யமலர்த் தாள்.

ஸ்ரீநடேசர்துதி.

சிற்சாயை யாஞ்சிவத் தெரிவதனை மாய்த்திடுமால்
சிற்சபையான் சேவடியின் சீர்
இன்பங்க ளெல்லா மெழில்பெறவே தந்திடுமவ்
வம்பலத்தி லாடு மடி.

ஸ்ரீசிவகாமிஅம்மைதுதி.

தவமுனூற்றிச் சாராத தற்பதத்திற் சேர்க்குஞ்
சிவகாமிச் சேவடியின் சீர்.

ஸ்ரீகுமாரன்றுதி.

இகபரத்துந் துன்பங்க ளெய்தாத வண்ணம்
குகன்றன் பெயரையே கூறு
ஏர்மிகுகந் தோபநிடத் தின்றமிழாற் சாற்றுவனேன்
தீர்தருமா பாசங்க டேய்ந்து.

நூல்.

அச்சுத னாகின் றேனு னரமகா தேவ வுன்றன்
மெச்சிடு கருளு லேச மேவிய மகிமை யாலே
சொச்சிவிஞ் ஞான மான் சுகக னாகின் றேனன்
மெய்ச்சிவ னானிஃ தின்மேல் வேண்டுவ தென்னை கொல்லோ.

உளவிரி வதனு லுண்மை யுளதுபோ விலகா தந்த
உளவொழி வதனிற் றேவ னுறுமெய்ச் சம்வித்தா நிற்பன்
ஒளிருமச் சம்வின் மாத்ர மொன்றதாய் நின்று மேலா
அளிர்பிறப் பில்லோ னனே மேவுத லிதன்மே லெள்ளே. (௨)

என்னினந் நியமாத் தோற்று மிவ்வெலாச் சடமுந் தூக்கந்
துன்னிய கனவைப் போலத் தொலைந்திடுங் கணத்தற் றூனே
பின்னுசிற் சடங்க டம்மைப் பிறங்கிநின் றெஃது காணும்
முன்னது சரித மில்லா அறிவுவிக் கிரக மாகும். (௩)

அதுவர னெனுமா தேவன் அதுமகா வரியு மாகும்
அதுவவிர் சோதிக் கெல்லா மரியமெய்ச் சோதி யாகும்
அதுபர மேச்சு ரன்று னதுபரம் பிரஹ்ம மாகும்
அதுவெனப் பிரம நானே அற்பமு மைய மில்லை. (௪)

சீவனே சிவனு மன்றிச் சிவமதே சீவ னுமச்
சீவனே கேவ லம்மெய்ச் சிவமதா யிலகா நிற்கும்
மேவிய வுமியி னூலை விளைந்திடு நெல்ல தாகும்
மேவிய வுமிதா னீங்கில் விளைகிலா வரிசி யாகும். (௫)

இத்திறங் கர்ம பத்த னேதமார் சீவ னுவன்
அத்திறக் கருமை நீங்க வவிர்சதா சிவனே யாவன்
குத்திர பாச பெத்தன் கோதுறு சீவ னுவன்
பொய்த்திரப் பாச முத்தன் புகழ்சதா சிவனே யாவன். (௬)

சீதா னுருவ மாய சிவமது தனக்கு மின்பச்
சீதரு சிவம் தன்றன் மெய்யு நச் சீத மற்கும்
மேதகு வணக்க மாவின் மிளிருளஞ் சிவம தாகும்
வீதலில் சிவத்தி னுள்ளம் விண்டுவு மாகு மன்றே. (௭)

மைவண மயனச் சம்பு மால்சிவ மயனு மாங்கே
எவ்வண முமையோர் பாக னிலக்குமி கணவ னென்றும்
மெய்வண ரிருவ ருக்கு மெய்திடு பேதங் காணேன்
அவ்வணஞ் சுவத்தி யாபு ளாகுக வோங்கி யென்பால். (௮)

தேகமே கோயி லாகச் செப்பிடப் படுமா லந்தத்
தேகமார் சீவன் றானே சிவனெனப் படுவன் றீய
போகமீந் திடுமஞ் ஞானப் புன்னிரு மால்ய நீத்துச்
சோகமென் பாவத் தாலே துகளிலாப் பூசை செய்க. (௯)

பேதமில் காட்சி மேலாப் பேசிடு ஞான மாகும்
ஏதமார் விடயம் பற்றா வின்மனந் தியான மாகும்
தீதுள மலத்தை நீக்கல் சிறந்தநீர் மூழ்க லாகும்
காதலி னோடு சித்தங் கதித்திடா தடக்கல் சௌசம். (௧௦)

பிரமமா மமுதந் தன்னைப் பெட்பொடு பருகல் வேண்டும்
வரமுள பிச்சை யேற்று மன்னிய வுடலைக் காக்க
ஒருவனே யாகி மிக்க வொழிவுள தாகி மற்றை
எவருமே மேவா தாகு மிடத்தினி லிருப்பா னாக. (௧௧)

இவ்வண மாச ரிக்க விலகிய புத்தி யுள்ளா
னிவ்வண மதனான் முத்தி யெய்துவ னவன்றா னிங்கே
மெய்வணத் திருவ தார்ந்த மேன்மையாந் தாமந் தன்னி
லுய்வணச் சுவத்தி யாயு ளுறுகவோம் நமவென் றுமால். ()

ஈர்நிரு சிங்க தேவர்க் கீசனின் கிருபை யாலே
பார்படைத் திடுவோன் மாயோன் பரசிவன் வடிவ மாகி
ஓர்மன மதற்கெட் டாதா யுணர்வியக்த மல்லா தாகி
பேர்வுறு வியய மில்லாப் பெறறிய வனந்த மாகி. (௧௩)

இருக்கெசு ராதி யான வியன்மறை வடிவ மாகித்
திருக்கிலாப் பிரம மாகுஞ் சீருள தன்னைக் காண்பான் [றன்
* திருக்குவிண் விரிந்து காணுஞ் சீர்மையா விஷ்ணு வின்
பெருக்கமார் பரப தத்தைப் பேரறி வாளர் காண்பார். (கச)

விழிப்பினை யுடையோர் மேலாம் விவேகமு முற்றோ ரான
இழுக்கிலா விப்பி ரர்கா மெறித்திடச் செய்வா ரந்த
வழுக்கிலா விஷ்ணு வின்றன் வண்பர பதத்தை யென்றும்
வழுக்கினிர் வாண வாணை யருமறை யாணை யென்றும். ()

வாழ்க விந்நூல் வாழிய படிப்பவர்
வாழ்க மாமறை மாத ரானினம்
வாழ்க வைதிக மார்க்க மெங்கணும்
வாழ்க சங்கரன் மலரடி யென்றுமே.

யசுர்வேதீய ஸ்கந்தோபநிடதம்
முற்றிற்று.

---

* திருக்கு = கண்.

புத்தகாலய புத்தக டிப்போவில்

இப்பொழுது விற்பனைக்கு தயாராகவிருக்கும் புத்தகங்கள்.

ஸ்ரீ பஞ்சதசி செட் 1	10— 0—0
ஹடயோகப்பிரதீபிகை	2— 0—0
ஸ்ரீ விசாரசந்திரோதயம் ...	1— 8—0
ஸ்ரீ சிவஞானபோத தத்துவப்பிரகாசிகை உரை.	1— 8—0
ஸ்ரீ பாலபோதம்	1— 4—0
யோகவாசிஷ்ட வைராக்கியபிரகரணம் வசனம் ...	1— 4—0
ஸ்ரீ ருத்ரரத்னாவலி	0—12—0
பஞ்சீகரணாதி 27 புத்தகங்கள்	0—12—0
சிவயோகப்பிரதீபிகை	0—10—0
ஸ்ரீ தேவகிதை ...	0—10—0
அபரோக்ஷாநுபூதி	0— 6—0
வேதாந்தபரிச்சேதம்	0— 6—0
தருக்ககௌமுதி	0— 6—0
ஆத்மபோதம், தத்துவபோதம் ...	0— 5—0
உத்திரகீதை	0— 4—0
சீதாசாரதாலாட்டு	0— 4—0
ஸ்ரீ நீலகண்ட சம்வாதம் ...	0— 4—0
ஸ்ரீ சிவபஞ்சாக்ஷர விளக்கம் ...	0— 4—0
ஸ்ரீ சங்கராசாரியா சரித்திரம்	0— 3—0
ஸ்ரீ இராமகீதை	0— 3—0
நந்திகேசுவரகாசிகை ...	0— 3—0
தத்துவமஸிமகாவாக்யம்	0— 2—0
நமசிவவிரதகட்டளை உரை ...	0 — 2 — 0
பிரஹ்மவித்யாசிரோதப்பத்ததி	0— 1—0
ஸ்ரீ சங்கராசாரியர் அஷ்டோத்திரம்	0— 1—0
ஸ்ரீ சங்கராசாரியர் படம்	0— 1—0
பிரஹ்மநாமாவலி ...	0 — 0—3
நாராயணஸ்தோத்திரம்	0— 0—3

ஸ்ரீ சங்கரவிலாஸ் சாரதாமந்திரம்,

67, வடக்குவீதி, தஞ்சாவூர்.